# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

### அ.சா.18 (LW 29 )

| **பெயர்** | ரவி | **தொழில்** | |
|---|---|---|---|
| **தகப்பனார் பெயர்** | செல்லத்துரை | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **13.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் நிலக்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்றுள்ளேன். நான் நிலக்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 10.03.2021ஆம் தேதி காலை 6.30 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்த போது கக்கணன் மகன் மொக்கை ராஜ் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரை பெற்று நிலக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.99/2021 சட்டப் பிரிவு 174 CRPC இன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.11**ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் மேல் விசாரணைக்காக மேல்படி முதல் தகவல் அறிக்கையை அப்போது நிலக்கோட்டை காவல் நிலைய பொறுப்பில் இருந்து அம்மைநாயக்கனுர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி. சண்முக லெட்சுமிக்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். முதல் தகவல் அறிக்கையை இரண்டாம் நிலை நீதித்துறை நிர்வாக நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகாரை யார் எங்கு வைத்து எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் அந்த புகாரை நிலக்கோட்டை பொறுப்பு காவல் ஆய்வாளருக்கு சுமார் 8.30 மணிக்கு அனுப்பினேன். அந்த ஊர் VAO விற்கு நான் தகவல் சொல்லவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் புகார் பெறப்படவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி புகார்

மற்றும் முதல் தகவல் அறிக்கை வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.14 09:21:51 +0530

Additional District Judge,

Dindigul.